ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சமூகநீதியின் பாதையில் ‘இஸ்லாமும் மார்க்சியமும்’

முனைவர் கா.மைதீன்,
உதவிப்பேராசிரியர் (மற்றும்) துறைத்தலைவர்,
இஸ்லாம் மற்றும் இஸ்லாமியத் தமிழியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 21.
மின்னஞ்சல் kmaideenmku@gmail.com

3

**முன்னுரை**

'இசுலாம்' என்றால் 'அமைதி' என்று பொருள். மனித உரிமைகள் மதிக்கப்படும் போதுதான் அமைதி கிடைக்கும். இசுலாம் உலக அமைதி என்பதை வார்த்தையளவில் மட்டும் கூறவில்லை. அமைதிக்கான எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய திருமறைச் செய்திகளின் மூலமாக வழிகாட்டுகிறது. இசுலாம் முழுமையானதொரு வாழ்க்கைத்திட்டம். அந்த அடிப்படையில் இசுலாம் சமதர்ம வாழ்விற்குரிய வழிமுறைகளை மிக விரிவாக எடுத்துக்கூறுகிறது. இசுலாமியக் கருத்துக்களை ஊன்றிப் படிப்பவர்கள் இசுலாம் சமதர்ம வாழ்வு முறைக்கு எத்தகு முறையிலான முக்கியத்துவத்தை நல்குகிறது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இக்கருத்தியலை உலகப் பொதுவுடமையாளர்களின் பொதுவுடைமைச் சிந்தனைகளோடு தொடர்புபடுத்தி விளக்கும் முகமாகவே இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளன.

**மார்க்சியமும் - இஸ்லாமும்**

'மார்க்சியம்' என்பது சமுதாயத்தில் நீதியை நிலைநாட்டுதல் என்பதன் மற்றொரு பெயர் என்றே கூறலாம். இக்கருத்து இசுலாம் சமயத்திற்கு முழுக்க முழுக்க ஏற்புடையதாகும். இசுலாம் சமூக நீதியை நிலைநாட்டுவதில் அதிக அக்கறை கொண்டுள்ளது. பிறப்பால் மனிதசமூகம் மொழி , இனம், நிறம், பொருளாதாரம் ஆகிய அடிப்படைகளில் தூண்டப்படுவதை இசுலாம் வன்மையாகக் கண்டனம் செய்கிறது.

மனிதஇனத்தை வேறுபடுத்தக்கூடிய எந்தவொரு சக்திக்கும் சமூகத்தில் இடம் அளிப்பதை இசுலாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்காகவே மனித சமுதாயத்தில் வேறுபாடுகளுக்கு இடம்தராத வகையில் இறைக்கோட்பாடுகளை இசுலாம் அமைந்துள்ளது. சமூகநீதியின் அடிப்படையில் குடிமக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவது ஓர் அரசின் அடிப்படைக் கடமை என்ற கருத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இசுலாமியத் திருமறை எடுத்தியம்பியுள்ளது.

மார்க்சியம் வலியுறுத்தும் பொருளாதாரச் சமத்துவம் இசுலாம் சமயத்தின் அடிநாதமாக விளங்குகிறது. பொருள்கள் ஒரு சாராரின் பக்கமே குவிந்து கொண்டிருப்பதை இசுலாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனை திருக்குர்ஆனில் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

"செல்வம் உங்கள் மத்தியிலுள்ள பணக்காரர்களுக்கிடையில் மட்டும் சுற்றிக் கொண்டிருக்க வேண்டாம் " (திருக்குர்ஆன்.59:7) இது இசுலாமிய சமயத்தின் மிக முக்கியமான அடிப்படை அறிவுரையாகும். இதுவே இசுலாம் சமயம் தம் சமூகத்திற்கும் தம் அரசிற்கும் எடுத்துக்காட்டும் பொருளாதார விதிமுறை எனலாம். செல்வம் சமூகத்தில் அனைவர் மத்தியிலும் சுற்றி வலம்வர வேண்டும். செல்வர்கள் மத்தியில் மட்டுமோ அல்லது வேறு எந்த ஒரு குறிப்பிட்ட பிரிவினர்களுக்கிடையே மட்டுமோ குவிந்து கொண்டிருப்பது தடை செய்யப்படவேண்டும் என்பது தான் அதன் பொருளாகும்.

‘இசுலாம்’ எடுத்துக்காட்டும் சமூக அமைப்பில் ஒரு செல்வந்தர் மேலும்மேலும் செல்வந்தர் ஆவதோ , ஒரு ஏழை மேலும்மேலும் வறுமையில் வாடுவதோ அனுமதிக்கப்படவில்லை. மாறாக , செல்வமானது சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களிடமும் மாறிமாறிச் சுற்றி வருவதையே இசுலாம் விரும்புகிறது. அதற்காகச் செல்வத்துடன் வாழும் செல்வந்தர்களுக்கு அவர்களின் செல்வம் ஏழை எளிய மக்களுக்கு வந்தடையச் சமய அடிப்படையிலான மிகப்பெரும் கடமையை இசுலாம் விதிக்கிறது. அதுதான் மூன்றாவது கட்டாயக் கடமையான 'ஜக்காத்' என்னும் கடமையாகும். செல்வந்தர்கள் தங்களது தேவைக்கு மேல் வைத்திருக்கும் பொருளின் ஒரு பகுதியைக் கட்டாயமாகப் பொருளற்ற ஏழைகளுக்கு வழங்கிட வேண்டும் என்பதே ஜக்காத் விதியாகும். எனவே , பொருளாதாரச் சமத்துவத்தை நிலைநாட்டுவதில் இசுலாம் சமயம் மார்க்சியத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது என்றே கூறவேண்டும்.

**இஸ்லாம் - மார்க்சியம் (சமூகக்கூட்டு மனப்பான்மை)**

சமூக வாழ்விற்கு தனிமனிதப் பண்புகளை அடித்தளமாக்கும் இசுலாம் தனிமனிதனைச் சமூகத்தின் ஓர் அங்கமாக எண்ணுவதை எங்கும் வலியுறுத்துகிறது. தனிமனிதப் பண்புகளின் அடிப்படையிலான சமுதாயக்கூட்டு வாழ்வைச் செம்மையான முறையில் அமைத்துத் தருவதில் இசுலாமும், மார்க்சியமும் மிகமிக நெருக்கமான உறவுகளைப் பெற்றுள்ளன. உலகியல் சார்ந்த லௌகீக வழிமுறைகளையும் சமயம் சார்ந்த ஆன்மீக செயல்பாடுகளையும் கூட்டு மனப்பான்மையுடன் நிறைவேற்றுவதைத்தான் இசுலாம் விரும்புகிறது.

அதனால்தான் தொழுகையிலும் கூட கூட்டுத் தொழுகைக்கு அதிகமான முக்கியத்துவத்தை இசுலாம் அளித்துள்ளது. இதேபோல் நாடு , இனம், மொழி, நிறம் ஆகிய அனைத்தும் கடந்த நிலையில் உலகளாவிய அளவில் மக்கள் ஒருங்கிணைந்து நிற்கவேண்டும் என்ற நோக்கில் சமூகக்கூட்டு என்ற அடிப்படையில்தான் ஐந்தாவது கட்டாயக் கடமையான 'ஹஜ்' என்பது இசுலாத்தில் விதிமுறையாக வைக்கப்பட்டுள்ளது. எனவே , மனித சமூகத்தின் மேம்பாடு என்பது தனிமனிதனை மையமாகக் கொண்ட சமூகக்கூட்டு முயற்சியில்தான் அடங்கியுள்ளது என்ற கருத்து இசுலாம் சமயத்திலும், மார்க்சியத்திலும் ஒன்று போலவே அமைந்துள்ளது.

**மனிதவாழ்வின் சமநிலை**

கார்ல்மார்க்ஸ் குறிப்பிடுவது போல் உணவு , உடை, உறையுள், சிற்றின்ப நிறைவு அவற்றோடு மனிதனின் தேவைகள் நின்றுவிடுவதில்லை என்பது போன்ற உலகியல் வாதக் கருத்துக்களுக்கும் இசுலாம் இடமளிக்கிறது. மனிதன் ஏககாலத்தில் உடல் , ஆன்மா, இவ்விரண்டினால் அமைக்கப்பட்டவன் என்ற உண்மையினை இசுலாம் முழுமையாக ஏற்றுக்கொள்கிறது.

மனிதர்கள் பருப்பொருளால் ஆகிய உடல் அமைப்பினைக் கொண்டு இவ்வுலகில் வாழ்பவர்களாலும் அவர்கள் ஆன்மா, சிந்தனை ஆகியவற்றின் மூலம் வாழ்க்கையில் மிக உன்னத நிலையையும் அடையவேண்டும் என்றே இசுலாம் விரும்புகிறது. அவ்விருப்பம் நிறைவேறுவதற்கான வழிமுறைகளையே வாழ்க்கை நெறிமுறைகளாக வகுத்துக்காட்டுகிறது. எனவே , மனித வாழ்வில் உடல் , ஆன்மா ஆகிய இரண்டும் முன்னேற்றம் பெறத்தக்க விதத்தில் வாழ்க்கைப் பாதையை அமைத்துத் தருவதில் இசுலாம் அதிக அக்கறையைச் செலுத்தி இரண்டிற்கும் சமநிலையினை ஏற்படுத்தவே இசுலாம் விரும்புகிறது. ஒன்றின் நலத்திற்காகப் பிறிதொன்றைத் துன்புறுத்துவதை இசுலாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆன்மீக சம்பந்தப்பட்ட செயல்பாடுகளுக்காக லௌகீக வாழ்வைத் துறத்லையோ அல்லது உலகியல் வாழ்வில் இன்னல்களை ஏற்றுக் கொள்வதையோ இசுலாம் விரும்பவில்லை , மாறாகச் செலுத்துகிறது. உடல் , ஆன்மா ஆகிய லௌகீக வாழ்வை ஆன்மீக வாழ்வின் சிறப்பிற்காகப் பயனுடையதாக்கும் வழிமுறைகளைத்தான் இசுலாம் எடுத்துக் காட்டுகிறது. ஆன்மீக வாழ்வு தொடர்பாக இசுலாம் எடுத்துக்காட்டும் சிந்தனை காரல் மார்க்சின் கோட்பாட்டிற்கு ஏற்புடையதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் , லௌகீக வாழ்வை ஆன்மீக வாழ்விற்காகப் பலியிடுதை இசுலாமும் , மார்க்சியமும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது உண்மையாகும். மனிதனின் இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்கிற உற்பத்திக் காரணிகளே சமூக , அரசியல், அறிவியல் வாழ்க்கையை ஒழுங்கு படுத்துகின்றன. மனிதர்களின் மனநிலையோ அல்லது சிந்தனையோ மனித வாழ்க்கையைத் தீர்மானிக்காது. மாறாகச் சமுதாய வாழ்வே மனிதனின் மனநிலையையும் , சிந்தனையையும் தீர்மானிக்கிறது என்பது கார்ல்மார்க்சின் கருத்தாகும். ஆனால் இசுலாம் மனிதனை எப்போதும் இயக்கிக் கொண்டேயிருக்கும் ஒரு இயக்கமாக எடுத்துரைக்கிறது. மனிதனுக்கென்று தனிப்பட்ட சிந்தனை சக்தியும் , மனோபாவமும் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளும் இசுலாம் அதற்கேற்ப ஒரு மனிதனின் இயக்கமும் சுதந்திரமாகச் செயல்படும் என்று கூறுகிறது. மனிதன் , இறைவன் ஒருவனுக்கு மட்டுமே கட்டுண்டவன் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளது.

**தனிமனித ஒழுக்கம்**

பொருளாதார காரணங்களால் கூட ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு கட்டுண்டு இருப்பதை இசுலாம் அங்கீகரிப்பதில்லை. ஒரு சமுதாய அமைப்பில் மாறுபட்ட சமுதாய உறவுகளை நிர்ணயம் செய்வதில் பொருளாதார காரணிகளே முதன்மை இடம் பெறுகின்றன என்பதை மார்க்சியத்தின் கருத்தெனலாம். இசுலாம் சமயம் மனித உறவு நிலைகளுக்கும் பொருளாதாரத் தேவையை மறுக்கவில்லை. ஆனால் மனித வாழ்வின் மதிப்பீடு என்பது பொருளாதாரத்தை மையமிட்டது என்பதை இசுலாம் ஏற்றுக்கொள்ளவில்லை. பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு

கண்டுவிடலாம் என்ற மார்க்சியத்தின் கருத்தையும் இசுலாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை , காரணம் இசுலாம் சமூகத்தில் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தரும் முக்கியத்துவத்தைவிட அதிகமான முக்கியத்துவத்தை மனித ஒழுக்கப் பண்புகளுக்குத் தருகிறது. இந்த ஒழுக்கப் பண்புகள் சீராக அமைய இறைவனுக்கும் , மனிதனுக்கும் இடையே உறவுகள் பலப்படவேண்டும் என்று நாடுகிறது இசுலாம். அதன் பயனாக ஒழுக்கப் பண்புகள் சீரமையும் என்றும் , அதன் காரணமாக சமூக வாழ்வும் , பொருளாதாரப் பிரச்சனையும் கூட நன்மை பயக்கும் விதத்தில் மாற்றத்தைப் பெறும் என்பதில் இசுலாம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது.

**மனிதநேயம்**

ஆதிக்கம் என்பது பற்றுக் கொள்ளுதல் , உரிமை பாராட்டுதல் என்று பொருள்படும். ஆதிக்க உணர்வு என்பது ஒருவருடைய அடிப்படை உரிமைகளில் பிறிதொருவன் தலையீடு செய்வதாகும் என்று இசுலாம் குறிப்பிடுகிறது. அந்த ஆதிக்க உணர்வு ஆண்டாண்டு காலமாக மக்கள் மனதில் இருந்து வருகிறது. ஆதிக்க உணர்வினால் மண்ணாசை , பொன்னாசை, கொண்டு மனித உரிமைகளைப் பறித்ததன் விளைவை உலக வரலாறுகள் மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

சமூகத்தில் மனிதர்கள் அன்பு , மரியாதை, மதிப்பு, பகிர்வு ஆகிய உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஒருவரை ஒருவர் சார்ந்து நேசமுடையவராய் வாழ்வதே சாலச் சிறந்ததாகும். ஒவ்வொரு மனிதனும் உண்மை - பொய் , தவறு - சரி என்னும் இருவிதச் சூழலில் சிக்குண்டு போராடி வருவது இயற்கை. இப்போராட்ட வாழ்வில் அறநெறிச்சட்டம், அதாவது பகுத்தறிவுக்கும் , தன்மான உணர்வுக்கும் இயைந்த செயலை ஒருவர் செய்யும் போதே அச்செயல் நற்செயலாக கருதப்படுகிறது. இவற்றுக்கு எதிரானவை தீயசெயல்களாகவே கருதப்படுகின்றன. சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளால் சமூக உறவில் விரிசல் ஏற்படுகிறது. தன்னைச் சார்ந்தவனை , சகமனிதனாக எண்ணாது அடிமையாக நினைக்கும்போது மனித உறவு மறுக்கப்படுகிறது. மனித நேயம் மறக்கப்படுகிறது. அதனால் தன்னலம் தலை தூக்குகிறது.

தன்னலத்தின் பக்க வேர்களான பொறாமை , பிறரை வளர விடாமை , ஊழல் ஆகியவை மனித நேயமின்மை என்னும் நீரை உறிஞ்சி, மனிதனுக்கு அளித்து அவனை விசவிருட்சமாக்குகிறது. சுயலாபத்திற்காகப் பிறரை அடக்குதல், உழைப்பவரின் உழைப்பைச் சுரண்டுதல் , தன் அதிகாரம் ஆதிக்கத்தைப் பயன்படுத்தித் தான் மட்டும் எல்லாம் என்கிற மமதையோடு தன்னைச் சார்ந்து வாழ்பவரை ஒடுக்குகின்ற நிலை இவையனைத்தும் மனித மாண்பைச் சிதைக்கிறது. இந்நிலையில் ஒடுக்கப்படுகிறவன் கூட்டமாக எழுந்து புரட்சியாளனாக மாறுகின்றான். அவ்வாறு ஒன்றுக்கொன்று எதிராகும்போது வன்முறை உருவாகி , வளர்கிறது. வன்முறையின்போது பகுத்தறிவு நிலையில் சிந்திக்காமல் உணர்ச்சி மேலிட்ட நிலையில் எதையும் செய்து விடுகிறான். இதனால் மனித நேயமற்ற செயல்பாடுகள் அன்றாடச் சமூக நிகழ்வுகளாக அரங்கேற்றம் பெறுகின்றன.

சமூகத்தில் முதலாளி , தொழிலாளி என்ற ஆதிக்க பேதம் இருத்தல் கூடாது. முதலாளி , தொழிலாளியிடம் அன்புடையவனாக அவனை ஆதரிக்க வேண்டும். தொழிலாளியின் உழைப்பை மட்டும் பெற்றுக் கொள்ளாமல் அவனை வாழவைக்க வேண்டும். கூலியாட்களிடம் தேவைக்கு அதிகமாக வேலையைப் பெற்றுக்கொண்டு அவர்களுடைய கூலியைக் குறைத்து விடுதல் மனித நேயமாகாது.

இதைத்தான் நபிகள் நாயகம் அவர்கள் , “பணியாட்களிடம் சக்திக்கு மிஞ்சிய வேலைப்பளுவை அவர்கள் மீது சுமத்தவேண்டாம். அவ்வாறு சுமத்த நேரிட்டால் அந்த வேளையில் நீங்கள் அவர்களுக்குத் துணை புரியுங்கள்" (நூல்: புகாரி; முஸ்லிம்) என உரைத்துள்ளார்கள். தொழிலாளியின் துன்பத்தை முதலாளியாய் இருப்பவன் உணர்ந்து பார்த்து தெரிந்து கொண்டால்தான் வேலைப்பளுவின் உண்மைத்தன்மை புரியும். தொழிலாளியும் ஒரு மனிதன்தான் என்பதை உணர்த்தவே அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

மேலும், “உழைப்பாளியின் வியர்வை உலர்வதற்கு முன் அவருடைய கூலியைக் கொடுத்து விடுங்கள்" (நூல்: இப்னுமாஜா) என்கிறார் நபிகள் நாயகம். பொதுவாக , முதலாளி வர்க்கத்தைச் சார்ந்த மனிதன் பிறர் உழைப்பில் உட்கார்ந்து உண்ணக் கூடியவன். அதனால் பாதிக்கப்படக் கூடியவன் தொழிலாளியே! இப்படியே அடிமைப்பட்டு , வறுமைப்பட்டு, துயரப்பட்டுப் போகிறவன் இறுதியில் உணர்ச்சி வசப்பட்டு எழுச்சியடைகிறான். இத்தகைய எழுச்சி , சமூகத்தில் மனித நேயமற்ற வன்முறைச் செயல்களுக்கு வழிகாட்டிவிடும். எனவே முதலாளியானவன் தொழிலாளியின் அடிப்படை உரிமைகளைப் பறித்துக் கொள்ளக் கூடாது என்பதை இசுலாம் வலியுறுத்திச் சுட்டுகிறது.

இறைவன் முன் உயர்ந்தவன் , தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற நிலை கிடையாது. கருப்பன் , வெள்ளையன் என்ற பாகுபாடு கிடையாது. ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காகவே பல கோத்திரங்களாகவும் பல கிளைகளாகவும் , பல சமுதாயமாகவும் மனித இனம் படைக்கப்பட்டதேயன்றி உலக வாழ்வில் யாருக்கும் அடிபணிந்து அடிமைத்தொழில் செய்யும் பொருட்டு அன்று,

"மனிதர்களே! உங்களையும் , உங்களுக்கு முன்னிருந்தோரையும் , படைத்த இறைவனுக்கே அடிபணியுங்கள் ". (திருக்குர்ஆன்.2:21)

“அடிபணிவதில் யாரையும் இணை வைக்காதீர்கள்" (திருக்குர்ஆன்.18:40) என்று திருமறை தெளிவாக்குகிறது.

"மனிதனைவிட வழிதவறியவன் யார் இருக்கக்கூடும்" (திருக்குர்ஆன். 46:5) இசுலாம் கூறினாலும் மனித நேயமற்ற செயலைச் செய்தல் கூடாது என வற்புறுத்துகிறது.

மனிதநேயம் மறந்த மனிதனுடைய எந்தச் செயல்பாட்டிற்கும் இசுலாம் சமயத்தில் இடமில்லை என்பதைத் திருமறை வசனங்கள் தெளிவாக உணர்த்திக் காட்டுகின்றன. இவ்வாறு , இசுலாம் சமயத்தில் காணப்படும் மனித உரிமை மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. அதைச் சரியாகப் பயன்படுத்தும் போது மட்டுமே மனிதநேயம் போற்றிப் பாதுகாக்கப்படும் என்பது இசுலாம் சமயத்தின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும் என்பதைச் சமூகநீதி அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பொருளாதாரச் சமத்துவத்தை நிலைநாட்டுவதில் இசுலாம் சமயம் மார்க்சியத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது. மார்க்சியக் கோட்பாடு காரண காரியங்களின் அடிப்படையில் அமைந்த உலகியல் மீதுதான் நம்பிக்கை கொள்கிறது. இவ்வுலக நிகழ்வுகள் ஒவ்வொன்றும் காரண காரியத்துடன் இயக்கம் பெறுகின்றன என்பதில் இசுலாமும் நம்பிக்கை கொண்டுள்ளது. எந்தவொரு நிகழ்வும் எந்தவொரு காரணமும் இன்றி நடைபெறுவதில்லை என்பதைத் திருக்குர்ஆன் எடுத்துக்காட்டுகிறது. ஏங்கல்சும் , காரல்மார்க்சும் காரண காரியங்களின் அடிப்படையில் அமைந்த உலகியலை, உலகியல் இலாபங்களை நம்புகின்றனரோ , அதுபோலவே இசுலாம் சமயமும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உலகியல் வாழ்விற்குரிய காரணங்களை மிகத்தெளிவாக மதிப்பீடு செய்து விளக்கியுள்ளது. தனிமனித இயக்கங்களைக் காரணகாரியங்களுடன் ஆராய்ந்து அதற்கேற்பத் தண்டனைகளை வழங்குவதைத்தான் இசுலாம் ஏற்றுக் கொள்கிறது என்பதையும் இந்த ஆய்வு எடுத்துரைக்கிறது.

**பார்வை நூல்கள் :**

1. அப்துற் - ரஹீம் - ‘இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்’ தொகுதி 1,2,3.
   யுனிவர்ஸல் பிரிண்டிங் ஹவுஸ், 11 சுல்தான் தெரு, சென்னை. முதற்பதிப்பு - 1979
2. அப்துல் ரகூப் பாகவி.ஆர் (மொழிபெயர்ப்பு ஆசிரியர்) - ‘அண்ணல் நபி’
   இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், 78 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12, முதற்பதிப்பு – 1995
3. அஜ்மல்கான்.பீ.மு., - ‘இஸ்லாம் வரலாறும் தத்துவமும்’ அரசி பதிப்பகம்,
   18 திருமலைசாமி புரம், திண்டுக்கல், முதற்பதிப்பு – 1995.
4. ‘திருக்குர்ஆன் மூலமும் தமிழ் விளக்கவுரையும்’ ஆறாம் பதிப்பு (பாகம் 1,2)
   1995 இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், 78 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை – 12.
5. பிரடரிக் ஏங்கெல்;சு, - ‘குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்’
   நீயூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை – 98, முதற்பதிப்பு – 2011.